# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோயம்புத்தூர்-641 003, தமிழ்நாடு.

## இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2020-2021

நூற்றாண்டு பழமைமிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த வேளாண் கல்வி கற்பிப்பதில் ஒரு முதன்மை நிறுவனமாகும். வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த உயர்கல்வி படிப்புகளை வழங்குவது, வேளாண்மை ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, இந்திய மற்றும் உலக அளவில் சிறந்து விளங்கும் பல்கலைக் கழகங்களுடனும், ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் இணைந்து தரமான கல்வியை வழங்குவதே இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவனங்களின் 2019-ம் ஆண்டு தரமதிப்பீட்டின் படி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களிலும் **68வது** இடத்தையும், இந்தியப் பல்கலைக்கழக தரவரிசையில் **44வது** இடத்தையும், மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் **இரண்டாம்** இடத்தையும் பெற்றுள்ளது.

இப்பல்கலைக்கழகம் 2020-2021 ஆம் கல்வியாண்டில் கீழ்க்காணும் **10** பட்டப்படிப்புகளை **14** உறுப்பு மற்றும் **28** இணைப்புக் கல்லூரிகள் மூலம் வழங்குகிறது.

1) இளமறிவியல் (மேதமை) வேளாண்மை
2) இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை
3) இளமறிவியல் (மேதமை) வனவியல்
4) இளமறிவியல் (மேதமை) உணவு, ஊட்டச்சத்தியல் மற்றும் உணவு முறையியல்
5) இளமறிவியல் (மேதமை) பட்டுவளர்ப்பு
6) இளம் தொழில் நுட்பம் (வேளாண்மைப் பொறியியல்)
7) இளம் தொழில் நுட்பம் (உயிர்த் தகவலியல்)
8) இளம் தொழில் நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல்)
9) இளம் தொழில் நுட்பம் (உணவு தொழில் நுட்பம்)
10) இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை

(*மேதமை - ஹானர்ஸ்)

**தேவைகள்:** விண்ணப்பதாரர்கள் i) மேல் நிலைத் தேர்வில் தேவையான பாடங்களை பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ii) 1.7.2020 அன்று 21 வயதிற்கு மிகாமல் இருக்கவேண்டும். (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு இல்லை). iii) தமிழ்நாட்டினை இருப்பிடமாக கொண்டு இருக்க வேண்டும். மேலும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பினை இதர மாநிலங்களில் பயின்ற விண்ணப்பதாரர்கள், விண்ணப்ப தகவல் கையேட்டில் உள்ள நிரந்தர இருப்பிட சான்றிதழை (Nativity Certificate) தகுந்த அதிகாரியிடமிருந்து பெற்று சமர்பிக்க வேண்டும். இதர மற்றும் விரிவான சேர்க்கைக்கான தகவல்களை பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் கையேட்டில் (2020-2021) பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

**விண்ணப்பிக்கும் முறை:** விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் https://tnau.ac.in/ugadmission/ உள்ள விண்ணப்பத்தினை இணையதள வாயிலாக மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் விளியோகிக்கபடமாட்டாது. இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிப்பதற்கான குறைந்த அளவு வசதிகள் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்பு மற்றும் இணைப்புக்கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**இணையதள வாயிலாக மட்டுமே கலந்தாய்வு நடைபெறும்.**

முக்கிய தேதிகள்:

| வ. எண் | விவரம் | தேதி |
|---|---|---|
| 1. | இணையதளத்தில் விண்ணப்பம் பதிவேற்றம் செய்ய துவங்கும் நாள் | 07.08.2020 |
| 2. | இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | 17.09.2020 |
| 3. | விண்ணப்பத்தில் பிழை திருத்தம் செய்ய ( 3 நாட்கள் மட்டும்) | 18.09.2020 to 20.09.2020 |
| 4. | தரவரிசை பட்டியல் வெளியீடு | 29.09.2020 |

விண்ணப்பக்கட்டணம் : விண்ணப்பக்கட்டணத்தினை இதர பிரிவினருக்கு ரூ.600,- (SC/SCA/ST: ரூ.300)] இணையதள வாயிலாக விண்ணப்ப படிவத்தில் உள்ள வழிகாட்டி (link) வழியாக செலுத்தலாம்.

விண்ணப்ப இணையதளம் : https://tnau.ac.in/ugadmission/

**மேலும் விவரங்களுக்கு:**
தொலைபேசி: 0422-6611345 & 6611346
மின்னஞ்சல் : ugadmissions@tnau.ac.in

முதன்மையர் (வேளாண்மை) மற்றும்
தலைவர் (மாணவர் சேர்க்கை)

செ.ம.தொ.இ./661/வரைகலை/2020

## ERRATUM

The degree programme mentioned in Tamil Advertisement appeared on 07.08.2020 in popular dailies at S.No. 7 is B.Tech. (Biotechnology) instead of (Bioinformatics) as mentioned. The error is regretted.

It may be read **as உயிரித் தொழில்நுட்பம்** instead of உயிர் தகவலியல்